# தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் தண்ணீர்

வாழ்வுக்குத் தண்ணீர் இன்றியமையாததாக உள்ளது. நாம் அறிந்துள்ள படி, தண்ணீரின்றி இந்த உலகம் இருக்க முடியாது என்று அறிவியல் அறிஞர்கள் நம்புகின்றனர். தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றத் தண்ணீரைப் பல நிகழ்ச்சிகளில் தேர்ந்தெடுத்துக் கொண்டார். தொடக்கத்தில் தேவன் எல்லாவற்றையும் படைத்த பொழுது, "ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமி" (2 பேது. 3:5) என்பதாகவே கூறப்படுகிறது. தண்ணீரிலிருந்து உண்டாக்கப்பட்ட பிறகுதான் உயிர் வாழ்வு என்பது இப்பூமியில் சாத்தியமுள்ளதாக்கப்பட்டது. பூமியில் சகல விதமான சரீர வாழ்வையும் நீரானது நிலைநிறுத்திற்று (ஆதி. 2:6) மற்றும் அது அவற்றைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகின்றது.

நோவா தண்ணீரினால் காக்கப்பட்டார் (1 பேது. 3:20). நோவா பேழையைக் கட்டிய பிறகு, நோவாவையும் அவரது குடும்பத்தையும் பாதுகாப்பாய்ச் சுமந்து செல்லவும் அவர்களை அழிவில் இருந்து காக்கவும் தண்ணீர் அவசியமாயிற்று. அப்பொழுது தேவன் தண்ணீருக்குப் பதில் நெருப்பை அனுப்பியிருந்தால் அவர்கள் யாவரும் எரியூட்டப் பட்டிருப்பார்கள். தேவன் பெருவெள்ளத்தை அனுப்பிய பொழுது பேழையினுள் மனித வாழ்வைப் பாதுகாப்பதற்குத் தண்ணீர் அவசியமானதாக இருந்தது.

இஸ்ரவேலின் பிள்ளைகள் எகிப்தியரின் படைகளுக்குத் தப்பிச் சென்ற பொழுது, தண்ணீரினூடே பாதுகாப்பாகக் கடந்து சென்றனர். பார்வோனின் படையானது தண்ணீரால் அழிக்கப்பட்டது (யாத். 14:26-29). யாத். 14:30அ - வில் நாம், ''இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார்'' என்று வாசிக்கின்றோம். பின்னாட்களில் பவுல், "எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (1 கொரி. 10:2) என்று எழுதினார். இவ்வசனத்தைக் கொண்டு சிலர் ஞானஸ்நானம் என்பது தெளித்தலே என்று வாதிட்டுள்ளனர். இஸ்ரவேலர்கள் கடலைக் கடந்த பொழுது மேகம் அவர்கள் மீது தண்ணீரைத் தெளித்ததாக இவர்கள் கற்பனை செய்கின்றனர். இது உண்மையாயிருந்தால், இஸ்ரவேலர்கள் "வெட்டாந்தரையிலே" (யாத்.

*14:22) கடந்து சென்றிருக்க மாட்டார்கள். உண்மையில், தேவன் இஸ்ரவேலருக்கு அளித்திருந்த மேகமானது, தண்ணீர் மேகமாய் இல்லாமல், புகை மேகமாய் இருந்தது. அது, “பகலில் மேகத்தையும், புகையையும், இரவில் கொழுந்து விட்டு எரியும் அக்கினிப் பிரகாசத்தையும்” (ஏசா. 4:5) உடையதாயிருந்தது.*

*பிற்பாடு இஸ்ரவேலர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிப்பதற்குத் தண்ணீரைக் கடந்து சென்றனர் (யோசுவா. 3:14-17). தண்ணீரைக் கடந்து சென்றதன் மூலம் மக்கள் தேவன் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்த ஆசீர்வாதங்களைக் கண்டடைந்தனர்.*

*நாகமானுக்கும் அவரது தொழு நோய் குணமாகுதலுக்கும் இடையில் தண்ணீர் நின்றது (2 இரா. 5:1-14). இயேசுவிடம் வந்த பார்வையற்ற மனிதரைக் குணமாக்கத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டது (யோவா. 9:6, 7).*

*பரலோக வாழ்வின் நிலைப்பாடும் கூட தேவனுடைய அரியணை யிலிருந்து ஓடிவரும் நீரின் நதியினாலேயே அடையாளப்படுத்தப் படுகின்றது (வெளி. 22:1). உயிர் வாழ்வு உட்பட தேவனுடைய ஆசீர்வாதங்கள் பலவும் தண்ணீரின் மூலமாகவே வருகின்றன. இயேசுவின் மூலம் இரட்சிப்பை நாடுகின்றவர்களுக்குத் தேவன் தண்ணீரைத் தேர்ந்தெடுத்தது என்பது தற்செயலானதல்ல (1 பேது. 3:21). ஒப்பீட்டுக் கருத்தின் அடிப்படையில் உடல் வாழ்வு என்பது இரத்தத்தைச் சார்ந்துள்ளது (ஆதி. 9:4) மற்றும் ஆவிக்குரிய வாழ்வு என்பது இயேசுவின் இரத்தத்தைச் சார்ந்துள்ளது (எபி. 9:22), அது போலவே தண்ணீர் என்பது உடல் வாழ்வுக்கும் மற்றும் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய புது வாழ்வுக்கும் அவசியமானதாக உள்ளது (ரோமர் 6:4).*